**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருச்செங்கோடு**

முன்னிலை:– திரு. P. ரங்கராஜ், B.A.B.L.,

நீதித்துறை நடுவர், திருச்செங்கோடு

2026– ம் ஆண்டு ஜனவரி மாதம் 27–ம் நாள் செவ்வாய்க்கிழமை

**C.M.P.No.75/2025**

**in**

**MC.No.11/2024**

C.N.R.No.TNNM08-000320-2025

1. சிவரஞ்சனி (வயது 31),
   க/பெ.ஐயப்பன்,
2. இளவர்.ரிதிக்சா
   (2–ம் மனுதாரருக்காக கார்டியனாக
   அவருடைய தாயார் சிவரஞ்சனி)

மேற்படியார்கள் முகவரி,
க.எண்.2/35,
ரத வீதி, பெரியமணலி கிராமம் மற்றும் அஞ்சல்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம். ... மனுதாரர்கள்

/எதிராக/

கார்த்திக்,
த/பெ. பழனியப்பன்,
4/14, வெள்ளையன்காடு,
நாட்டாமங்கலம் கிராமம் மற்றும் அஞ்சல்,
நாமக்கல் வட்டம்,
நாமக்கல் மாவட்டம். ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 25.04.2025–ம் தேதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, இறுதியாக இன்று விசாரணைக்காக வந்த போது

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.01.27 20:00:25 +0530

மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.S.ஸ்ரீகண்ணன் மற்றும் திரு.V.கார்த்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டு, ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1) இம்மனுவானது கு.வி.மு.ச பிரிவு 125(2) –ன் கீழ் 1, 2–ம் மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரரிடமிருந்து இடைக்கால ஜீவனாம்சம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:–**

2) எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரின் கணவர் என்றும், 2–ம் மனுதாரர் எதிர்மனுதாரருக்கும் 1–ம் மனுதாரருக்கும் பிறந்த மகள் என்றும், 1–ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பிறந்த ரித்விக் என்ற ஒரு மகன் உள்ளதாகவும், அவர் எதிர்மனுதாரருடன் உள்ளதாகவும், 2–ம் மனுதாரர் முதல் மனுதாரரின் பாதுகாப்பில் இருந்துவருவதாகவும், இளவரான 2–ம் மனுதாரருக்கு 3 வயது ஆகின்றது என்றும், கடந்த 3 வருடமாக மனுதாரர்கள் தனியே வசித்து வருவதாகவும், 1–ம் மனுதாரர் தன்னையும் தன்னுடைய மகனையும் பராமரித்துக்கொள்ள போதுமான வசதி இல்லாமல் மிகுந்த சிரமத்துடன் இருந்துவருவதாகவும், மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரரைத்தவிர வேறு யாரும் பொருள் உதவி அளிக்கக்கூடியவர்கள் யாரும் இல்லை என்றும், மனுதாரர்களுக்கு வாழ்க்கை பொருளுதவி அளிக்கவேண்டிய சட்டப்படியான கடமை எதிர்மனுதாரருக்கு உள்ளது என்றும், எதிர்மனுதாரர் தன் மனைவியையும் மைனர் குழந்தையையும் பராமரிக்காமல் புறக்கணித்து விட்டது சட்டப்படி குற்றம் என்றும், எனவே மனுதாரர்கள் எதிர்மனுதாரரிடமிருந்து

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.01.27 20:01:00 +0530

ஜீவனாம்சம் கேட்டு இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல்செய்யப்பட்டு M.C.11/2024 –ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றும், பின்னிட்டு எதிர்மனுதாரர் பல பொய்யான சங்கதிகளுடன் பதிலுரை தாக்கல்செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு இடைக்கால ஜீவனாம்சமாக தலா ரூ.10,000/–ம் வீதம் மொத்தம் ரூ.20,000/–ம் வழங்க உத்தரவிடவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்.

3. **எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:–**

1–ம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் பிறந்த ரித்விக்கை எதிர்மனுதாரர் தனது பாதுகாப்பில் பராமரித்து வருவதாகவும், 2–ம் மனுதாரரை வேண்டுமென்றே 1–ம் மனுதாரர் எதிர்மனுதாரரிடம் காட்டாமலும், எதிர்மனுதாரர் பார்க்க செல்லும் பொழுதெல்லாம் மனுதாரர் தனது தாயாரின் பேச்சை கேட்டுக்கொண்டு வீண் பிரச்சனை செய்துவருகிறார் என்றும், 1–ம் மனுதாரர் எதிர்மனுதாரரின் பராமரிப்பில் வளர்ந்துவரும் ரித்விக்கை இதுவரை நேரில் வந்து பார்க்கவோ, பேசவோ ஒருமுறை கூட வந்தது இல்லை என்றும், 1–ம் மனுதாரர் M.Sc.,B.Ed., பட்டப்படிப்பு படித்துள்ளார் என்றும், எதிர்மனுதாரர் தனது மனைவியான 1–ம் மனுதாரருடனும், தனது 2–வது குழந்தையுடனும் சேர்ந்து வாழ தயாராக உள்ளதாகவும், 1–ம் மனுதாரரே தனது தாயாருடைய துர்போதனைகளை கேட்டுக்கொண்டு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதை தவிர்த்துவருகிறார் என்றும், மேலும் எதிர்மனுதாரர் 2–ம் மனுதாரருக்கு தேவையான அனைத்து தேவைகளையும் பூர்த்திசெய்ய தயாராக உள்ளார் என்றும், எதிர்மனுதாரர் HDB Financial Services நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் சுமார் ரூ.29,000/–ம் மட்டுமே சம்பளமாக பெற்றுவருவதாகவும், அந்த வருமானத்தில் தனது வாழ்க்கை செலவுக்கும் தனது

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.01.27 20:01:36 +0530

பெற்றோர்களின் பராமரிப்பு செலவுகளுக்கும் மற்றும் தனது மகன் ரித்விக்கின் கல்வி மற்றும் பராமரிப்பு செலவுகளையும் மற்றும் எதிர்மனுதாரர் சொந்த தொழில்செய்து நலிவடைந்த கடன்களுக்காக தான் பெற்ற இரண்டு வங்கி கடனுக்கு ரூ.14,103/– மற்றும் ரூ.9,411/– என தனது வருமானத்திலிருந்து செலுத்திவருவதாகவும், எதிர்மனுதாரருக்கு தான் செய்யம் வேலையை தவிர மற்ற எந்த தொழிலும் இல்லை என்றும், தற்பொழுதும் 1–ம் மனுதாரரையும் தனது பெண் குழந்தையையும் அழைத்துச்செல்ல தயாராக உள்ளதாகவும், 1–ம் மனுதாரர் வேண்டுமென்றே எதிர்மனுதாரரை துன்புறுத்த வேண்டுமென்றும், பழிவாங்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தால் 1–ம் மனுதாரர் தான் M.Sc.,B.Ed., பட்டப்படிப்பு படித்தும் எந்தவித பணிக்கும் செல்லாமலும், 2–ம் மனுதாரரை தன்வசம் வைத்துக்கொண்டு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் எதிர்மனுதாரரிடமிருந்து சுயலாபம் கருதி எதிர்மனுதாரரின் வருமானத்திற்கு அதிகமாக இடைக்கால ஜீவனாம்சமாக தலா ரூ.10,000/–ம் 1–ம் மனுதாரர் கோருவது நியாயமில்லை என்றும், இடைக்கால ஜீவனாம்ச தொகை எதிர்மனுதாரரின் சக்திக்கு உகந்ததாக இல்லை என்றும், எனவே எதிர்மனுதாரர் மற்றும் அவருடைய குழந்தையின் நலனை கருத்தில்கொண்டு 1–ம் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு வழங்கும்படி பிரார்த்திக்கிறார்.

4) மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில் மனுதாரர்கள் மனுவில் கோரியவாறு உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.

5) ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. 1–ம் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் எதிர்மனுதாரர் 1, 2–ம் மனுதாரர்களை

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.01.27 20:01:52 +0530

பராமரிக்காமல் இருந்துவருவதாகவும், தற்போது 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், பராமரித்துக்கொள்ள போதுமான வசதி இல்லாமல் மிகுந்த சிரமத்துடன் இருந்துவருவதாக குறிப்பிட்டுள்ளார். எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுதாரர் கூறப்பட்டுள்ள சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை என்றும், 1-ம் மனுதாரர் மற்றும் அவரது குழந்தையுன் சேர்ந்து வாழ விரும்புவதாகவும், 1-ம் மனுதாரர் 2-ம் மனுதாரரை பார்க்கக்கூட விடுவதில்லை என்றும், 1-ம் மனுதாரர் M.Sc.,B.Ed., பட்டப்படிப்பு படித்துள்ளார் என்றும் கூறியுள்ளார்.

6) இருதரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் எதிருரையை நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. இம்மனுவில் வழக்கு எண். M.C.No.11/2024 -ல் இடைக்காலமாக எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டுமென்று மனுவில் கோரியுள்ளார். ஆவணங்கள் பரிசீனை செய்யப்பட்டதில் எதிர்மனுதாரர் மனுதாரரை தனது மனைவி என்றும், 2-ம் மனுதாரரை அவரது குழந்தை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். மனுதாரர் தனது மனுவில் அவர் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர் கணவர் என்ற முறையில் தனது மனைவியான மனுதாரரையும், அவரது குழந்தைகளையும் பராமரிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அவருக்கு உள்ளது. எதிர்மனுதாரர் தான் HDB Financial நிறுவனத்தில் வேலைசெய்து மாதம் ரூ.29,325/- வருமானம் ஈட்டிவருவதை ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் தான் தொழில் அபிவிறுத்திக்காக பெற்ற கடன் தொகைக்கு மாதம் ரூ.14,103/- மற்றும்

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.01.27 20:02:10 +0530

ரூ.9,411/— என தனது வருமானத்திலிருந்து செலுத்திவருவதாக தெரிவித்துள்ளார். மேலும் எதிர்மனுதாரர் தாக்கல்செய்த ஆவணங்களில் அவர் 2024—ம் வருடத்திற்கான சம்பளப்பட்டியலை தாக்கல்செய்துள்ளார். ஆனால் அவர் எதிருரையில் 03.06.2025 —ம் தேதி தான் தாக்கல்செய்துள்ளார். மேலும் அவர் தனது தொழில் அபிவிறுத்திக்காக பெற்ற கடன் தொகைகளில் இன்றைய தேதி வரை பெருமளவில் திருப்பி செலுத்திவிட்டது தெரியவருகிறது.

7) மேலும் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் தான் என்ன தொழில் செய்வதற்காக கடன் பெற்றார் என்பது குறித்தோ, அந்த தொழிலில் என்ன நஷ்டம் ஏற்பட்டது என்பது குறித்து எந்த ஆவணத்தையும் தாக்கல்செய்யவில்லை. மாறாக தான் கடன் பெற்று தொழில் நடத்தி வந்ததையும் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே எதிர்மனுதாரர் தான் செய்துவரும் தொழில்களை மறைத்தும் அதன் மூலமாக பெறும் வருமானத்தை மறைத்தும் எதிருரை தாக்கல்செய்துள்ளது தெரியவருகிறது. எனவே தான் சம்பாதிக்கும் சம்பளத்திலிருந்து மேற்படி கடன் தொகைகள் பிடித்தம் செய்வதாக எந்த ஆவணத்தையும் எதிர்மனுதாரர் தாக்கல்செய்யவில்லை. மேலும் தனது சம்பள வங்கிக்கணக்கிலிருந்து நேரடியாக கடன்தொகை பிடித்தம் செய்யப்படுவதாக எந்த ஆவணத்தையும் தாக்கல்செய்யவில்லை. எனவே எதிர்மனுதாரர் தாக்கல்செய்த ஆவணங்களின் மூலம் ரூ.7,00,000/—ம் கடன் பெற்று தொழில்செய்து வந்துள்ளதும், 2023—ம் வருடம் ரூ.4,00,000/—ம் கடன் பெற்று தொழில் செய்துள்ளதும் தெரியவருகிறது. மனுதாரர் தனது மனுவிலும்,

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.01.27 20:02:29 +0530

எதிர்மனுதாரர் நாட்டாமங்கலம் கிராமத்தில் உள்ள அவரது நிலத்தில் பட்டுப்புழு வளர்த்து தொழில் செய்துவருவதாகவும் அதன்மூலம் வருடம் ரூ.10,00,000/–ம் வரை வருமானம் ஈட்டிவருவதாக தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் தனது எதிருரையில் தான் பட்டுப்புழு வளர்ப்பு தொழில்செய்துவரவில்லை என மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. எனவே எதிர்மனுதாரர் தாக்கல்செய்துள்ள சம்பளப்பட்டியல் ஆறு மாதங்களுக்கு முந்தைய சம்பளப்பட்டியலை தாக்கல்செய்துள்ளால். எதிருரை தாக்கல்செய்யப்பட்டுள்ள காலத்தில் அவருடைய சம்பளப்பட்டியலை தாக்கல்செய்யவில்லை. மேலும் உண்மையான சம்பள விவரம் மற்றும் அவரது தொழில் வருமான விவரத்தை நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை. எனவே எதிர்மனுதாரர் குறைந்தபட்சம் மாதம் ரூ.40,000/–ம் வரை சம்பளம் பெற வாய்ப்புள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

8) ஆகவே, இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், அன்றாட விலைவாசியை கருத்தில் கொண்டும், 1, 2 **மனுதாரர்களுக்கு** உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம் ஆகிய செலவுகளுக்காக எதிர்மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சமாக மாதந்தோறும் தலா ரூ.5,000/–ம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியில் இருந்து மனுதாரருக்கு இந்த வழக்கு M.C.No.11/2024 முடியும் வரை வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. இந்த தொகையை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5–ம் தேதிக்குள் 1ம் மனுதாருக்கு நேரிலோ, பண அஞ்சல் மூலமாகவோ, வங்கி கணக்கின் மூலமாகவோ செலுத்தலாம் என உத்தரவிடப்படுகிறது.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.01.27 20:02:42 +0530

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.01.27 20:02:58 +0530

நீதித்துறை நடுவர்,
திருச்செங்கோடு.